

கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் தெற்கு ஒன்றியம் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக ஒன்றியச் செயலாளர் அரியராவி. எஸ்.கண்ணன் கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சிவ. தியாகராஜன், செம்பியன் பட்டூர்.அமிர்தலிங்கம் , பா. செங்குட்டுவன், பாவாடை. கோவிந்தசாமி, கனக. கோவிந்தசாமி, தி.வேல்முருகன், பெண்ணாடம் பேரூர் கழக செயலாளர் குமரவேல், மற்றும் மருவத்தூர். ஜெயராமன், கோதண்டபாணி தொளார் இராஜேந்திரன், கூடலூர். ஜெயராமன், கொத்தனூர். ரகுநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்ற கட்டுமானத் தொழிலாளி மகள்

# நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.3 லட்சம்!

### அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்!

சென்னை,ஜன.4-

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், திண்டுக்கல் மாவட்டத்தில், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி சரவணகுமார் ஆவார். அரவது மகள் செல்வி. நந்தினி 2022-2023 ஆம் கல்வி ஆண்டில் பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி செல்வி.நந்தினிக்கு புத்தகசெலவு, தனிப் பயிற்சி (Special Tuition). உடை, போக்குவரத்து உள்ளிட்ட இதர வாழ்வாதார செலவினங்களுக்கு ரூ.3, 00,000/ (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) சிறப்பு ஊக்கத்தொகையாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று (03.01.2024) தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்களும் செல்வி. நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.3,00,000/க்கான காசோலையினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் திருமதி ஆர். செந்தில்குமாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தலைமை நிலையச் செயலாளர்

# கு.க.செல்வம் மறைவு: இன்று அமைதிப்பேரணி!

### சென்னை மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, ஜன. 4 -

மறைந்த கு.க.செல்வம் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவரும், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் மீது தீராதபற்றும், பாசமும் கொண்டவரும், இளைஞர் அணி செயலாளர் அவர்களின் நம்பிக்கையாக திகழ்ந்தவர் ஆவார்.

இவர் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கூறியது போல "வெள்ளந்தியான உள்ளத்துக்குச் சொந்தக்காரர்". கழகத் தலைமை நிலைய செயலாளர் கு.க.செல்வம் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற தகவல் அறிந்தவுடன் உடனே அன்னாரது உடலுக்கு முதலமைச்சர் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரது இறுதி ஊர்வலம் கோடம்பாக்கம் ராம் தியேட்டர் அருகில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (4.1.2024) காலை 10.00 மணி அளவில் புறப்பட்டு வடபழனி ஏ.வி.எம். மயானத்தில் இறுதிச் சடங்கு நடைபெறுகிறது. ஆகவே சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி/ வட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பகுதி / வட்டக்கழக நிர்வாகி கள் மற்றும்கழக மூத்த முன்னோடியினர் அனைவரும் தவறாமல் அன்னாரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சி, TNHB பேரறிஞர் அண்ணா எழில்மிகு பசுமை பூங்காவில் அயப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அ.ம.துரைவீரமணி தலைமையில் நடைபெறும் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட துணை ஆட்சியர் சுகபுத்ரா, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தை துவக்கி வைத்து பொது மக்களின் கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் பரிசீலனை செய்து உடனடியாக மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து சேவைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.உடன் ஒன்றிய குழு உறுப்பினர் இரா.வினோத்குமார், துணைத் தலைவர் ஏ.எம்.யுவராஜ் மற்றும் வார்டு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

### மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் ஊழியர்களுக்கு

# தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பேச்சுத் தமிழ் பயிற்சி!

சென்னை, ஜன.4-

தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுப் பரப்புரை திட்டத்தின் ஒரு பகுதியாக, பேச்சுத் தமிழ் வகுப்புகளை வழங்கி வருகிறது. குறிப்பாக, ஒன்றிய அரசுப் பணியாளர்கள், வங்கி ஊழியர்கள், பிற மாநிலத் தொழிலாளர்கள் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு புலம்பெய ர்ந்தோருக்கு இந்தி வழியில் பேச்சுத் தமிழ் கற்றுத்தரப்படுகிறது. இதற்காக, இந்திவழிப் பேச்சுத் தமிழ் பாடத் திட்டம் வகுக்கப்பட்டு, அப்பாடங்கள் 14 காணொலிகளாக உருவாக்கப்பட்டுள்ளன.

தற்போது இத்திட்டம், மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தில் பணிபுரியும் வெளி மாநில ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இப்பணியாளர்கள் கணக்கெடுப்பின் போது சரியானத் தகவல்களைப் பெறவும், புதிய சூழலுக்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும், அவர்களின் அன்றாட வாழ்க்கையைச் சுமூகமாக நடத்திச் செல்லவும் தமிழ்மொழியை அவர்கள் பேசக் கற்றுக்கொள்வது இன்றியமையாததாகும்.

இது தொடர்பாக, இந்தப் பயிற்சியின் முதல் குழுவுக்கான வகுப்பு இராஜாஜி பவனில் உள்ள தமிழ்நாடு மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தில் இன்று (03.01.2024) நடைபெற்றது. இவ்வகுப்பினை மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் இயக்குநர் திரு. சஜ்ஜன்சிங் ஆர் சவான், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் உதவி இயக்குநர் திருமதி இரா. மதுரா மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் தொடங்கி வைத்து உரையாற்றினர்.

இப்பேச்சுத் தமிழ் பயிற்சியானது இணையவழியாக நடத்தப்படும். 2 மாத கால அளவிலான இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் பங்கேற்பாளர்களுக்குத் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பேச்சுத் தமிழ் பயிற்சி தொடர்பாக மேலும் விவரங்களுக்கு tva@tn.gov.in, tpktva@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.



மாதவரம் வடக்கு பகுதி 19 ஆவது வட்டம் மாத்தூர் பகுதியின் கழக மூத்த முன்னோடி சிவப்பிரகாசம் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டு ஓய்வில் இருப்பதை அறிந்த, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், அவரது உடல் நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர், பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், நேரில் சென்று நலம் விசாரித்தனர். உடன் ஜி. ராஜேஷ் கண்ணன், சின்ன மாத்தூர் காசி, முகமது முஸ்தபா, சிவராமன் உள்ளனர்.

## பெருங்குடியில் சுற்றுச்சூழல் பூங்கா!

சென்னை, ஜன.4-

பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) அமைப்பது தொடர்பான பொதுமக்கள் பங்களிப்புக் கூட்டம் 08.01.2024 (திங்கட் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சமுதாய நலக் கூடம், ஐ.ஐ.டி. காலனி, பள்ளிக்கரணை, சென்னை600 100 என்ற இடத்தில் மேயர், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த நல் வாய்ப்பினைப் பயன்படுத்தி கொண்டு 08.01.2024 அன்று நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

